www.tamilarangam.net

# தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்களுக்கு...

ஈழத் தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தரப் போவதாகக் கூறிய நீங்கள் சந்திரிகாவின் கரத்தைப் பலப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்து விடுவீர்களா? நீங்கள் கோரிய உரிமை தமிழீழம்தானே! சந்திரிகாவின் கரம் தமிழீழத்தை உங்களுக்குத் தந்துவிடுமா? கிடையாது என்றுதான் நீங்களும் கூறுவீர்கள்.

அப்படியிருக்க நீங்கள் எதனைப் பெற்றுக் கொடுக்கப்போகிறீர்கள்? நீங்கள் முன்பு மக்களுக்கு மேடை மேடையாக என்ன சொன்னீர்கள் என்று நினைத்துப் பார்ப்பதில்லையா? நீங்கள் நினைத்துப் பார்க்க மறுப்பீர்கள் என்பது தமிழ் மக்களுக்குத் தெரிந்ததுதான். அதனால் நாங்களே நினைத்துப் பார்க்கிறோம்!

தமிழர் விடுதலைக் கூட்டணி என்று பெயர் வைத்துக் கொண்டதும் தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்துவிட்டுத்தான் மறு வேலை பார்க்கப் போகிறீர்கள் என்றுதான் தமிழ் மக்களாகிய ஏமாந்து கெட்ட நாங்கள் நம்பினோம். வட்டுக் கோட்டையிலும் ஆவரங்காலிலும் மாநாடு போட்டு ஆய்வு நடத்தி மிகத் தெளிவாக எங்கள் மக்களுக்கு எடுத்துரைத்தீர்கள். இதில் சந்தேகமே வரக்கூடாது. அப்படிச் சந்தேகம் வந்தால் எங்களிடம் வாருங்கள்! தமிழீழம் பற்றி விளக்கம் தருகிறோம் என்றெல்லாம் அறிவுரை கூறினீர்கள்!

உங்கள் அறிவுரை கேட்டு இளைஞர் சமுதாயம் மட்டுமல்ல முதிய சமுதாயம்கூட வீறு கொண்டெழுந்து ''தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்று கோசமிட்டதை நீங்கள் மறந்திருப்பீர்கள்!

சிங்கள அரசுகளுடன் உறவா! துரோகிகளே! தமிழினத்தை விற்றுப் பிளைப்பா நடாத்துகிறீர்கள்! உங்களுக்கு இயற்கை மரணமே வரக்கூடாது என்று அரசை ஆதரித்தவர்களைப் பார்த்து நீங்கள் கோசமிடவில்லையா?

துரையப்பா, குமாரசூரியர், அருளம்பலம், தியாகராசா ஏன் இராசதுரையைக்கூட துரோகிகள் என்றுதானே நீங்கள் அடையாளம் காட்டினீர்கள். இவர்கள் எல்லாம் துரோகிகளாக இருந்தபோது எங்கள் மக்களில் சிங்கள ஆட்சியாளரால் விரட்டப்பட்டவர்கள் எத்தனை பேர் அகதிகளாக இருந்தனர்?

எத்தனை பேர் மீது சிங்கள அரசு குண்டுகள் வீசியது? எத்தனை ஆயிரம் குண்டுகள் எங்கள் மண்ணை சல்லடை போட்டது? யாழ்ப்பாணத்திலிருந்தும் கிளிநொச்சியிலிருந்தும் எத்தனை இலட்சம் பேர் சிங்கள அரசால் விரட்டப்பட்டனர்? உணவும், நோய்க்கு மருந்தும் அனுப்பப்படாமல் எத்தனை இலட்சம் பேர் தவித்தனர்? எத்தனை ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுக் காணாமல் போயினர்?

அன்று அரசை அண்டியிருந்தவர்கள் இருந்தபோது இப்படி எதுவும் நடைபெறவில்லையே? தமிழீழத்தை மீட்கப் புறப்பட்ட நீங்கள் கொழும்புக்குச் சென்று சிங்கள அரசின் கரத்தைப் பலப்படுத்தப் புறப்பட்ட பின்னர் தானே மேற்படி அனைத்தும் மிகத் தீவிரம் அடைந்து, எங்கள் இனத்தையே அழித்துவிட வழி வகுத்துள்ளது. அப்படியாயின் உண்மையில் துரோகிகள் யாராக இருக்க வேண்டும்.

நீங்கள் கொழும்புக்குச் சென்று தமிழ் மக்களுக்கு எவ்வளவோ உதவிகள் செய்ததாகக் கூறுவீர்கள். உங்களைவிட குமாரசூரியரும், கனகசூரியரும் பல உதவிகளை எங்கள் மக்கள் பலருக்குச் செய்துள்ளனர். நூற்றுக்கணக்கானவர்களுக்கு அரசில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தனர். அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நீங்கள் செய்திருப்பது ஐந்து சதவீதம்கூட தேறாது!

1983ம் ஆண்டு நடந்த இனக் கலவரத்தைத் தொடர்ந்து தமிழர் தலைவர்கள் என்று கூறிக் கொண்ட நீங்கள் அனைவரும் இனிமேல் சிங்களவருடன் வாழ முடியாது. ஒரேவழி தமிழீழம்தான் என்று கூறிக்கொண்டு இந்தியாவுக்கு ஓடி வந்தீர்கள்!

நீங்கள் இந்தியவுக்குச் சென்று விட்டீர்கள் என்று கேள்விப்பட்டதும் தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக ஈழத்தை விட்டுப் புறப்பட்டனர். எங்கள் தலைவர்களே நாட்டைவிட்டுச் சென்றுவிட்டனர். இனி நாங்கள் இருந்து என்ன செய்வது என்று கூறிக்கொண்டே

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டை விட்டு எங்கள் மக்கள் வெளியேற வில்லையா? இலட்சக்கணக்கான எங்கள் மக்கள் அகதிகள் என்ற நிலையை அடைய நீங்கள்தானே காரணமாக இருந்தீர்கள்!

ஜெயவர்த்தனாபோல் மோசமானவர் இல்லை சந்திரிகா! கொழும்பில் தமிழருக்கு எதிராக எந்தக் கலவரமும் வராமல் மிகவும் பண்புடன் தமிழரைப் பாதுகாக்கிறார் என்று நீங்கள் கூறலாம்!

ஜெயவர்த்தனாவே பாதுகாப்புக் கொடுத் துள்ளார். எப்போது தெரியுமா? இந்தியா நேரடியாகத் தலையிட்ட பின்னர் அவர்கள் விழித்துக் கொண்டார்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்திருக்கப் போகிறது. ஜெயவர்த் தனா மட்டுமல்ல பிரேமதாசா, விஜயதுங்காவும் தமிழ் மக்களுக்கு கொழும்பில் பாதுகாப்புக் கொடுத்தனர்.

1983க்குப் பின்னர்தான் இந்தியாவினுடைய கவனம் மட்டுமல்ல உலக நாடுகளின் கவனமும் இலங்கையின் பக்கம் திரும்பியது. இனியொரு தடவை கொழும்பில் இனக்கலவரம் நடந்தால் தமிழ் மக்களுக்கு தனி நாடு உறுதியாகிவிடும் என்பதனைக் கண்ட பின்னர்தான் உங்களைப் போன்ற சந்தர்ப்பவாதிகளுக்கெல்லாம் பாதுகாப்புக் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் நடந்த 13 பேர் மரணத் துக்கு கொழும்பில் 5000 தமிழர்கள் கொல்லப் பட்டனர். ஆனால் கொழும்பில் 5000 பேர் கொல்லப்படும்போது அமைதி காக்கப்பட்டது. 83 இலும் அரசுதான் அழிவை ஏற்படுத்தியது. 95 இலும் அரசுதான் பாதுகாப்புக் கொடுத்தது. எனவே சந்திரிகா நல்லவர் பாதுகாப்பானவர் என்று எங்கள் மக்களுக்குச் சொல்ல வரா தீர்கள்! கலவரம் ஒன்று வராமல் தடுத்தால்தான் தமிழ் இனத்தையே பிற நாட்டின் தலையீடின்றி அழிக்க முடியும். இதனைத்தான் சந்திரிகா செய்து வருகிறார். ஈழத் தமிழரின் அடிச் சுவட்டை அழிக்கும் வரை உங்களைப் போன்ற வர்களுக்கு சந்திரிகா மிகவும் நல்லவராகத்தான் இருப்பார்!

"அமுதத் தமிழர் நாட்டிலே தமிழராட்சி நாட்டவே, திமுதிமென்ற தீரர்கள் திரண்டு ·வாரீர் ஒட்டமாய்" என்று மூலைக்கு மூலை பாடிய வர்கள் நீங்கள்! இன்று எங்கே ஓட்டமாய் ஓடியுள்ளீர்கள்? சந்திரிகாவின் சலுகையில் சுகம் அனுபவிக்க என்று கூறினால் அதை மறுக்க முடியுமா?

முன்பு அரசியல் அதிகாரி என்ற பொறுப் பினை அருளம்பலம் எடுத்திருந்தபோது தமிழினத் துரோகி என்று மேடைகளில் முழங்கினீர்களே. இன்று மாவட்ட விருத்திக் கான தலைவர் பதவியினை ஏற்றுக்கொண் டிருக்கும் உங்கள் இரு எம்.பி.க்களை எப்படி அழைக்கலாம்? அருளம்பலம் அதிகாரியாக இருந்தபோது 12 இலட்சம் தமிழர்கள் அகதிகளாகவா இருந்தனர்? குண்டுகள் வீசி எங்கள் இனம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக் கிறது. நீங்கள் மாவட்டங்களை விருத்தி செய்யப் போகிறீர்கள்! கடைந்தெடுத்த ஏமாற்றுத்தானே நீங்கள் செய்வது! உங்களுக்கும் துரையப்பாவுக்கும் என்ன வித்தியாசம்? உங்க ளுக்கும் டக்ளஸ் தேவானந்தேக்கும் என்ன வித்தியாசம்?

இந்தியாவை நம்பி வந்த உங்களுக்கு எம்.பி.க்களுக்கான சலுகைகள் கிடைக்கவில்லை என்று கண்டதும் உங்கள் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு விட்டு எதிரியிடமே சென்றடைந்து எங்கள் மக்களையே அழிப்ப தற்குத் துணை போகிறீர்கள். உங்களையெல் லாம் துணைக்கு வைத்துக்கொண்டுதான் சந்திரிகா எங்கள் மக்களை அழிக்கிறார். நீங்கள் எல்லாம் அம்மையாருடன் இருப்பதாகத்தான் உலகுக்குச் சொல்லப்படுகிறது.

## காட்டி கொடுத்தல்

உதாரணத்திற்கு இங்கே ஓர் சம்பவத்தைச் சுட்டிக் காட்டுகிறோம். 24-03-97 திங்கள் கிழமை இரவு ஜனாதிபதி சந்திரிகாவின் அலரி மாளிகை இல்லத்தில் பாலஸ்தீனத் தலைவர் யாசர் அரபாத்துக்கு விருந்து கொடுக்கப் பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கத்தின் மகன் சித்தார்த்தன் உங்களைப் போன்று துரோகம் செய்யும் எம்.பி. சந்திரிகாவால் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். அரபாத் துக்கு தனது சகாக்களை அறிமுகம் செய்து வைக்கும்போது சித்தார்த்தனைக் காண்பித்து "நீங்கள் பயிற்சி அளித்த இவர் இப்போது இருப்பது என்னுடன்'' என்று அறிமுகப் படுத்தப்பட்டார். (இதோ ஓர் துரோகி என்று அறிமுகப்படுத்தியதற்கு ஒப்பான அறிமுகம்) மிரண்டு போன அரபாத் அப்படி என்னுடைய பி.எல்.ஓ. அமைப்பு இலங்கைத் தமிழர்களுக்கு பயிற்சி அளிக்கவில்லை. வேறு அமைப்போ அல்லது தனி நபரோ அளித்திருக்கலாம் என்று கூறியபோது, இந்த சித்தார்த்தன் இல்லை இல்லை "நீங்கள்தான் பயிற்சி அளித்தீர்கள்" என்று உதவி புரிந்த தலைவர் ஒருவரை இன்னொரு தலைவருக்கு காட்டிக் கொடுத்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்கள் உரிமையை மீட்க எதிரியுடன் போரிடுங்கள் என்று பயிற்சி கொடுத்து உதவி செய்தவரை அதே எதிரியுடன் கூட்டுச் சேர்ந்து உதவியவரையே காட்டிக் கொடுத்த துரோகி யல்லவா சித்தார்த்தன். யாசர் அரபாத் மறுக்கப் போனதால்தான் சித்தார்த்த னுக்குக் கோபம் வந்து தானே சிறந்த துரோகி என்று பகிரங்கமாகத் தனது வாயினாலேயே வெளிப்படுத்திக் கொண்டு விட்டார். அரபாத் மறுத்திருக்காவிட்டால் சித்தார்த்தனும் உங்களைப் போன்றே தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு சந்திரிகா போடும் உணவை ஒரு பிடி பிடித்திருப்பார்!

## நிரந்தர தரகர்

நீங்களும் சித்தார்த்தனும் இன்று ஓரணியில் தானே! இவர்களுக்கென்றாலும் எப்போதாவது ஓர் நாள் விருந்து. ஆனால் உங்கள் வழிகாட்டி நீலன் திருச்செல்வத்துக்கு வாரா வாரம் அல்லவா சந்திரிகா விருந்து கொடுக்கிறார். ஈழத் தமிழ் மக்களை அழிப்பதற்கு சிறந்த ஓர் தரகர் இந்த நீலன் திருச்செல்வம்தானே. யு.என்.பி. வந்தாலும் நீலன்தான் தரகர். எஸ்.எல்.எப்.பி. வந்தாலும் நீலன்தான் தரகர். உரிமை கேட்ப தாகக் கூறும் உங்களுக்கும் வழிகாட்டி. உரிமை கொடுக்க மறுக்கும் அரசுக்கும் வழிகாட்டி! இந்தத் தரகரின் சிபாரிசுகளினால்தானே தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே கொழும்பில் பாது காப்பு வழங்கப்படுகிறது. ஈழ விடுதலையை அழித்துவிட வெளிநாடுகளுக்கும் சென் றல்லவா சந்திரிகாவுக்காக பிரசாரம் செய்கிறார் உங்கள் நீலன். நீலன் மட்டும்தான் பிரசாரமா? எம்.சிவசிதம்பரமுமல்லவா சந்திரிகாவுக்கு சிபார்சு செய்திருக்கிறார். 21-ந் திகதி நடை பெற்ற சிங்களவரின் தேர்தலுக்காக தமிழர்கள் சந்திரிகாவின் கட்சியினை ஆதரிக்கும்படி மிகவும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். முன்பு சென்னையில் இருந்தபோது தமிழர் பிரச்சனை தொடர்பாக சந்திப்பதற்கு கேட்ட போது அரசியலிலிருந்து ஒதுங்கிவிட்டேன், வயது காரணமாக என்னால் செயல்பட முடியாமல் உள்ளது என்று காரணங்கள் கூறி ஒதுங்கிய சிவசிதம்பரம் இன்று தமிழர்களை அழித்து வரும் அரசுடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட எப்படி முடிகிறது. இன்றைய உங்கள் கொள்கை என்ன? தமிழீழ விடுதலைப் போராட்டம் வேரோடு அழிந்துவிட வேண்டும் என்பதுதானே!

போதும் உங்கள் துரோகத்தனம்! கொழும்பில் பல தமிழர்கள் துரோகிகளாக இருக்கின்றனர். அவர்களையெல்லாம் விட்டு விட்டு ஏன் உங்களைக் குறிப்பிடுகிறோம் என்றால் நீங்கள்தான் தமிழ் மக்களை இந்த அழிவு நிலைக்குக் கொண்டு வந்தவர்கள். யாரென்றே தெரியாதவர்கள் துரோகிகள் ஆவதில் ஆச்சரியமில்லை! டக்ளஸ் தேவானந்தே போன்றவர்களெல்லாம் தோன்றி மறைவார்கள்.

தமிழ் மக்களது உரிமைகள் பறிக்கப்படும் போது சிங்கள ஆட்சியாளர் யாராவது ஓர் தமிழ்த் துரோகியை தங்கள் பக்கம் வைத்துக் கொண்டு தமிழ் மக்களே தங்கள் பக்கம் இருப்பதாக காண்பிப்பார்கள். அப்படிக் காண்பிக்கப்பட்டவர்கள்தான் குமாரசூரியரும், கனகசூரியரும். அன்றோ ஒன்று அல்லது இரண்டு பேர்தான் துரோகிகள். இன்றோ நீங்கள் கூண்டோடு ஒட்டுமொத்தமாக அல்லவா போட்டிபோட்டுக் கொண்டு துரோகம் செய்கிறீர்கள். துரோகத்தை மட்டுமா செய்கிறீர்கள்? ஆட்சியாளரை நெறிப்படுத்தி, நல்ல முறையில், ஒழுங்காக, கெட்ட பெயர் வாங்காமல் தமிழினத்தை அழிக்க வேண்டும் என்ற வழிகாட்டும் பணியினைத்தானே இன்று செய்துகொண்டு இருக்கிறீர்கள். நீங்கள் கொழும்பிலிருந்து செய்யும் சிபார்சுகளும் வெளிப்படுத்தும் கண்டனக்குரல்களும் தமிழ் மக்களின் தமிழீழக் கொள்கையினை ஈடு செய்யுமா? நீங்கள் கொழும்புக்குச் சென்ற பின்னர்தானே ஆயிரக்கணக்கான எங்கள் மக்கள் அழிக்கப்பட்டனர். லட்சக்கணக்கான மக்கள் ஒரே நாளில் அகதிகள்ாக்கப்பட்டனர். பாரம்பரியம் மிக்க எங்கள் பிரதேசம் குண்டு களால் சல்லடை போடப்பட்டது. இந்தத் துணிவு சந்திரிகாவுக்கு எப்படி வந்தது. துரோகிகளான நீங்கள் சந்திரிகாவின் காலடியில் மண்டியிட்ட பின்னர்தானே இப்படிப் பாரிய தாக்குதல்கள் நடைபெற்றன. இப்படியான ஓர் அழிவு தமிழ் மக்களுக்கு நேர்ந்தபோது இந்திய அரசோ பிற நாடுகளோ அதனைக் கண்டிக்கவில்லை. ஏனென்று தெரியுமா? அழிவை ஏற்படுத்தும் அரசின் பக்கம் ஈழத்தமிழர் தலைவர்கள் என்று சொல்லப்படும் நீங்கள் எல்லாம் நின்றதனால் தான் யாரும் கண்டனம் செய்யவில்லை.

உங்களுக்கே ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கப் பிடிக்காது. இந்த வினைதான் எங்கள் இனத்தின் கண்ணீரில் நீச்சலடிக்க உங்களுக்குத் துணை செய்கிறது. உங்கள் வாயைக்கூட முழுமையாகத் திறக்க முடியாத அதிகாரம் கொண்டதுதான் உங்களது எம்.பி. பதவி. இந்தப் பதவிக்காக உங்களுக்குள் நீங்கள் போட்டுக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட சண்டை இருக்கிறதே மிகச் சிறந்த கோமாளித்தனம். நீங்கள் ஒவ்வொருவரும் தனிமையில் உட்கார்ந்து சிந்தித்துப் பாருங்கள். வரலாற்றை மறந்து விட்டால் மீண்டும் நேரம் ஒதுக்கி நீங்கள் வெளியிட்ட புத்தகங்களை என்றாலும் தூசி தட்டிப் படித்துப் பாருங்கள். அப்போது தமிழரது துயர வாழ்க்கை எப்படி யானது என்பதைக் கண்டு கொள்ளலாம். தயவு செய்து ஈழ மக்களின் விடுதலையைக் கெடுத்து விடாதீர்கள். உங்களுக்குப் பதவிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஓர் இனத்தையே ஆட்சியாளரிடம் அடிமையாக்கி பதவிகளைத் தேடாதீர்கள்!

## செல்வ நாயகம் நூற்றாண்டு விழா செல்வநாயகம் அடிவருடியா?

தந்தை செல்வநாயகத்தை எங்கள் மக்கள் எந்த அளவுக்கு நேசித்தார்கள் என்பது நாடறிந்த விடயம். தமிழ் இனத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று 1972ல் செல்வா கூறியதையிட்டு ஆச்சரியம் அடைந்தோம். அவர் ஓர் தீர்க்கதரிசி என்பதை இன்று அறிகிறபோது வியக்கத் தோன்றுகிறது.

உங்கள் அனைவரையும் மனதில் வைத்துத் தான் அன்று அப்படி அவர் கூறியிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை! தந்தை செல்வாவுக்கு விழாக் கொண்டாட உங்களுக்கு ஏதேனும் தகுதியுண்டா?

அவரது கொள்கையினைக் கைவிட்ட நீங்கள், தமிழினத்தை அழிப்பதற்கு அரசுடன் துணை போகும் நீங்கள், அற்ப சலுகைகளுக்காக எங்கள் இனத்தையே அடிமைகளாக்கத் துடிக்கும் நீங்கள் செல்வாவுக்கு வாரிசுகள் என்று காண்பிக்கவா விழா எடுக்கிறீர்கள்? அடிவருடிகளுக்கும் தமிழீழக் கொள்கையைக் கொண்ட செல்வாவுக்கும் தொடர்பா? இருக்க முடியாது. உங்களது இலாபங்களுக்காக நீங்கள் செல்வாவின் பெயரைப் பயன்படுத்துகிறீர்கள். அவரது ஆவி உங்களை என்றைக்கும் மன்னிக் காது. அடிவருடும் கொள்கைக்கும் செல்வ நாயகத்துக்கும் எந்தவிதச் சம்மந்தமும் கிடை யாது. அவரது பெயரை நீங்கள் கொச்சைப் படுத்தாது விட்டால் அதுவே நீங்கள் தமிழ் மக்களுக்குச் செய்யும் பேருதவியாய் இருக்கும்.

## செய்யவேண்டிய உதவி

நீங்கள் தமிழ் மக்களுக்காகச் செய்ய வேண்டிய கடமை ஒன்று உண்டு. அதனைச் செய்தால் உங்களை யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள்! தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பெயரை தயவுசெய்து மாற்றிவிடுங்கள்! தமிழர் என்ற சொல்லையும் விடுதலை என்ற சொல்லையும் தொடர்ந்தும் நீங்கள் கொச்சைப் படுத்தாதீர்கள்! பின்நாளில் ஈழத் தமிழரையே காக்கை வன்னியர்கள் என்று சிங்களவர் எழுதிவைத்து மகாவம்சத்தில் சேர்த்துவிடுவார்கள். அல்லது உண்மையில் தமிழ் மக்கள்மீது கொஞ்சமாவது இரக்கமிருந் தால் கொழும்பை விட்டு விட்டு வேறு நாடு எதற்காவது சென்று அங்கே தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை நடத்துங்கள். பின்னாளில் சரித்திரம் உங்களைப் பழிக்காது.

சந்திரிகா, தமிழரை அழித்ததும் விரட்டிய தும் போக எஞ்சிய தமிழரை அடிமைகளாக்கி, வடக்குக் கிழக்கை உங்களிடத்து ஒப்படைக்க நீங்கள் எம்.பி.க்களாகி கொழும்பில் பதவி சுகம் அனுபவிக்க வேண்டும். இதுதானே உங்கள் கொள்கை! என்ன அருமையான கொள்கை! இந்தக் கொள்கையில் நரிகளின் தந்திரம் இருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? அப்படியாயின் உங்களை நரிகள் என்று மல்லவா கூறவேண்டும். இந்தக் கொள்கைதான் டக்ளஸ் தேவானந்தேயினுடையதும்! என்ன அற்புதமான ஒற்றுமை உங்களுக்குள்.

ஏதோ உங்களைப் பழிக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் இவற்றினைக் கூற வில்லை. ஒரு காலத்தில் உங்களை நம்பிய வர்கள் நாங்கள். நீங்கள் ஏமாற்றுகிறீர்களா? அல்லது யாராலும் ஏமாற்றப்பட்டு இப்படி ஆனீர்களா என்பதே எங்களுக்கு ஏற்பட்ட சந்தேகம்! நீங்கள் திருந்தினால், அல்லது ஒதுங்கினால் மகிழ்வது எங்கள் மக்களில் முதன்மையானவர்கள் நாங்களாகத்தான் இருப்போம். நீங்கள் அன்று மேடைகளில் முழங்கியது இன்றும் எங்கள் காதுகளில் ரீங்காரமிடுகிறது. அன்றைய முழக்கங்களை நீங்களெல்லாம் எப்படித்தான் மறந்தீர்களோ! உண்மையில் இந்த மன உறுதி வேறு யாருக்கும் வரவே வராது!!

மீண்டும் வேண்டுகிறோம். அற்ப பதவி சுகத்துக்காக தமிழீழம் என்னும் புனிதமான எங்கள் மக்களின் தாகத்தை சிதைத்து சிங்கள வருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்துவிடா தீர்கள். அப்படி ஒருவேளை நடந்துவிட்டால் நீங்கள் பெற்ற பிள்ளைகளே உங்களை மன்னிக்கமாட்டார்கள்!

பிரச்சாரப் பிரிவு
ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி
1997 ENDLF



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்